(3) முந்தைய நாள் பேரவை நடவடிக்கை குறித்து முதலமைச்சரின் விளக்கம்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நேற்று மாலை அவை நடந்துகொண்டிருந்தபொழுது டெல்லிக்குச் செல்லுகின்ற—தாமரைத் திரு பதக்கம் வாங்குவதற்காக டெல்லிக்குச் செல்லுகின்ற—விடுதலை தியாகிகளை வழி அனுப்பி வைப்பதற்காக நானும் கல்வி அமைச்சரும், பின்தங்கிய நல அமைச்சரும் புகை வண்டி நிலையத்திற்குச் சென்றிருந்தோம். சென்றிருந்த நேரத்தில் இங்கு பேசிக்கொண்டிருந்த நண்பர் துரைமுருகன் அவர்களுடைய பேச்சைத் தொடர்ந்து சட்டசபையிலே ஏற்பட்டுவிட்ட சிறு விரும்பத்தகாத நிகழ்ச்சிக்கு நான் உள்ளபடியே என்னுடைய பெரு வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் வாக்கு வாதங்களுக்கிடையே நண்பர் ரா. ரா. முனுசாமி அவர்கள் தங்களுடைய இருக்கையில் உட்காருங்கள் என்று சொல்வதற்கு ஒரு தகாத வார்த்தையை சொன்னார் என்றும் நான் கேள்விப் பட்டேன். அது நாம் காத்து வருகின்ற இந்த அவையினுடைய மாபை நிச்சயமாக குலைக்கும்—குலைக்கிறது என்பதை நன்றாக உணர்கிறேன். அதற்காக நண்பர் முனுசாமி அவர்கள் தன்னுடைய வருத்தத்தை தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்று தங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நடந்த நிகழ்ச்சிகளுக்கு வருத்தம் தெரிவிக்கிறேன்.

(4) நடைமுறைக் கேள்வி.

நீக்கப்பட்ட சில பகுதிகளை மீண்டும் நடவடிக்கைக் குறிப்பில் சேர்ப்பது குறித்து.

THIRU K. T. K. THANGAMANI: Sir, I would like to raise a point of Order. The point of Order is under Rule 83 (1) which states as follows:—

> "Any Member may at any time submit a point of order for the decision of the Speaker but in doing so shall confine himself to stating the point."

It is made easy for me by the kind reference made by the Hon. Chief Minister. Yesterday after the walk out, we understand from the papers to-day (I had no occasion to go and refer to official proceedings), reference to Communist Party and the Communist Party receiving money from Delhi for toppling the